Registered as a News Paper

04 பக்கங்கள்: விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 22 (06-01-1992) திங்கட்கிழமை ஓசை: 322

## இரு பாடசாலைகளில் ஆங்கில இலக்கியம்

ஆங்கில இலக்கியம் 9, 10, 11 ஆம் வகுப்புகளில் யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக இரு பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இப்பாடநெறி கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்று ஆங்கிலக் கல்வி அமுலாக்கல் அதிகாரியும், பிரதிக் கல்விப்பணிப்பாளருமான துரை தியாகராஜா தெரிவித்தார். ஆங்கில (4ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமான் ஏமாற்றுகின்றார்; சிங்கள 'புத்திஜீவிகள்' எச்சரிக்கை

## அரசிற்கு நிர்ப்பந்தம் வரலாம்

(லண்டன்)

அமைச்சர் எஸ். தொண்டமான் தனது சமரசத்திட்டத்தைச் செயற்படுத்த மலையகப் பகுதியைப் பயன்படுத்தலாம் என சிங்களப் புத்திஜீவிகள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிங்களப் பத்திரிகையான 'திவயின' நேற்றுமுன்தினம் வெளியிட்டசெய்தியில் அமைச்சர் எஸ். தொண்டமானின் சமாதானத்திட்டம் சிங்களமக்களைஏமாற்றி தோல்வியடையச்செய்யும் ஒரு நடவடிக்கை என சிங்களப் 'புத்திஜீவிகள்' தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை திரு. எஸ். தொண்டமானின் தீர்வுத்திட்டம் தோல்வியை அடையுமானாலும், அவர் மலையகத்தில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடுமெனவும் இப்புத்திஜீவிகள் தெரிவித்ததாக அப்பத்திரிகைமேலும்தெரிவித்துள்ளது.

## மணலாறு காட்டுப்பகுதியில் இரு ஊர்காவற்படை பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டக் காட்டுப் பகுதியில் வேவு பார்க்க வந்த ஊர் காவற்படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்த நிலையில் ஓடிவிட்டனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது.

## தேயிலைச் செடியின் கீழ் 20 கிலோ கண்ணிவெடி

(பெல்மதுளை)

தேயிலைச் செடியின் கீழ் புதைத்துவைக்கப்பட்டிருந்த 20 கிலோ கண்ணிவெடியொன்று பெல்மதுளை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து தேடுதலை மேற்கொண்ட சிறிலங்கா பொலிசார் அலுமினியப் பானையொன்றுக்குள் இருந்த இந்த நிலக்கண்ணிவெடியைக் கண்டுபிடித்தனர்.

அப்பகுதி சுற்றிவளைக்கப்ட்டுப பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக எவரும் கைதாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு

### எழுச்சியன்

வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த எழுச்சியன் (கனகரட்ணம் கமலதாசன், கலைவாணி வீதி, சித்தன் கேணி) என்ற போராளிநேற்று வீரச்சாவடைந்திருக்கிறார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்

## இன்று பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலை ( 3ஆம் பக்கம் பார்க்க)

## நமுனுகுலகந்த மலையில் புலிகளின் முகாம்?

(பதுளை)

எல்லபொலிஸ்நிலையத்தில் இருந்து 18 மைல் தூரத்தில் உள்ள நமுனுகுலகந்தஎன்னும் இடத்தில் புலிகளின் கைவிடப்பட்ட முகாமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளைக்கு அருகில் இந்த இடம் உள்ளது.

4 மைல்தூரம் செங்குத்தாக ஏறிச்சென்று அடையக்கூடிய ஒரு மலை உச்சியில் இந்த முகாம் அமைந்திருந்தது. இம் மலையின் உச்சி எந்நேரமும் பனியினால் மூடப்பட்டிருக்

## ஐந்து நாடுகளிடம் புலிகள் பற்றிய தகவல் இந்தியா கோருகிறது

(டில்லி)

விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்கள் பற்றிய தகவல்களை தந்து உதவுமாறு இந்திய அரசு ஐந்து நாடுகளிடம் கேட்டுள்ளது.

...ன்ஸ், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிடமே இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கும் அவர்களுடன் தொடர்புநடத்துபவர்கள் பற்றித் தேவையான

## விரைவில் பொதுத்தேர்தல்? சுதந்திரகட்சிக்குள் குழப்பம்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் கடும் சுகவீனமுற்றதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்ட நிலையில் கட்சிச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றது. நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதி பிரேமதாசா தேர்தலை அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.ஸி.நேற்றிரவு அறிவித்தது.

சுகவீனமுற்று மருத்துவமனையில்...

அரசியல் குழுக்களைப் பலப்படுத்துவதில் ஈடுபடுகின்றனர்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவு பட்டு வலுவிழந்து நிற்கும் தற்போதையஅரசியல்சூழ்நிலையைப்பயன்படுத்தி பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி பிரேமதாசா முயற்சிக்கலாம் என்று தென்பகுதி அரசியல் அவதானிகள்எதிர்பார்க்கின்றனர்என பி.பி.ஸி. மேலும்தெரிவித்தது

## சுதந்திரக் கட்சியினுள் உட்கட்சி மோதல் தீவிரம்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சித் தலைமை மீதே சுதந்திரக்கட்சி எம்.பிக்களும்...

தாக்குதல்கள் உட்கட்சி மோதலை மேலும் தோற்றுவித்துள்ளனஎன்று 'தினகரன்'

## மணலாறு காட்டுப்பகுதியில் இரு ஊர்காவற்படை பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டக் காட்டுப் பகுதியில் வேவு பார்க்க வந்த ஊர் காவற்படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்த நிலையில் ஓடிவிட்டனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது.

## தேயிலைச் செடியின் கீழ் 20 கிலோ கண்ணிவெடி

(பெல்மதுளை)

தேயிலைச் செடியின் கீழ் புதைத்துவைக்கப்பட்டிருந்த 20 கிலோ கண்ணிவெடியொன்று பெல்மதுளை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து தேடுதலை மேற்கொண்ட சிறிலங்கா பொலிசார் அலுமினியப் பானையொன்றுக்குள் இருந்த இந்த நிலக்கண்ணிவெடியைக் கண்டுபிடித்தனர்.

அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டுப பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக எவரும் கைதாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு
### எழுச்சியன்

வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த எழுச்சியன் (கனகரட்ணம் கமலதாசன், கலைவாணி வீதி, சித்தன் கேணி) என்ற போராளிநேற்று வீரச்சாவடைந்திருக்கிறார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்

## இன்று பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலை

( 3ஆம் பக்கம் பார்க்க)

## நமுனுகுலகந்த மலையில் புலிகளின் முகாம்?

(பதுளை)

எல்லபொலிஸ்நிலையத்தில் இருந்து 18 மைல் தூரத்தில் உள்ள நமுனுகுலகந்தஎன்னும் இடத்தில் புலிகளின் கைவிடப்பட்ட முகாமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளைக்கு அருகில் இந்த இடம் உள்ளது.

4 மைல்தூரம் செங்குத்தாக ஏறிச்சென்று அடையக்கூடிய ஒரு மலை உச்சியில் இந்த முகாம் அமைந்திருந்தது. இம்மலையின் உச்சி எந்நேரமும் பனியினால் மூடப் பட்டிருக்கும். சிறிலங்காவின் உயர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து நாடுகளிடம் புலிகள் பற்றிய தகவல் இந்தியா கோருகிறது

(டில்லி)

விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்கள் பற்றிய தகவல்களை தந்து உதவுமாறு இந்திய அரசு ஐந்து நாடுகளிடம் கேட்டுள்ளது.

ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிடமே இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கும் அவர்களுடன் தொடர்புநடத்துபவர்கள் பற்றித் தேவையான

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீர்விற்கு இது இறுதிச் சந்தர்ப்பம்

### - கொம்லி குணவர்த்தனா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும், கௌரவமானதுமான தீர்வைக் காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இது. நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சியிலிருந்த அரசுகளெல்லாம் ஏதோ ஒரு வழியில் இனங்களுக்கிடையிலான நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அதனது பங்களிப்பைச் செய்துள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் ஆளும் கட்சி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்த போதெல்லாம் எதிர்க்கட்சிகள் அரசியல் லாபம் கருதி எதிர்த்துள்ளன.

- இவ்வாறு மேல்மாகாணசபை முக்கிய உறுப்பினரான கொம்லி குணவர்த்தனா; மேல் மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா மக்கள் கட்சித் தேசிய அமைப்பாளருமான ஓஸிஅபய குணசேகராவின் பத்திரிகை அறிக்கையை ஆதரித்து வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக 'ஐரிஸ் பிரச்சினை' என்றழைக்கப்படும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார உபகரணங்கள் எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்துவதற்காக சேதமடைந்த மின்சார இணைப்புக்களை திருத்தி அமைப்பதற்கு தேவையான மின்சார உபகரணங்கள் வட பகுதிக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன.

முதற்கட்டமாக முக்கிய திருத்த வேலைகளுக்காக காத்திருக்கும் மாங்குளம், சுன்னாகம் ஆகிய பகுதிகளுக்கு மேற்படி மின் உபகரணங்கள் எடுத்து வரப்படவிருக்கின்றன.

கடந்தவியாழக்கிழமை யாழ். அரச அதிபர் திரு. மாணிக்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

# அரசிற்கு நிர்ப்பந்தம் வரலாம்

(லண்டன்)

**அமைச்சர் எஸ். தொண்டமான் தனது சமரசத்திட்டத்தைச் செயற்படுத்த மலையகப் பகுதியைப் பயன்படுத்தலாம் என சிங்களப் புத்திஜீவிகள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

சிங்களப் பத்திரிகையான 'திவயின' நேற்றுமுன்தினம் வெளியிட்டசெய்தியில் அமைச்சர் எஸ். தொண்டமானின் சமாதானத்திட்டம் சிங்களமக்களைஏமாற்றி தோல்வியடையச்செய்யும் ஒரு நடவடிக்கை என சிங்களப் 'புத்திஜீவிகள்' தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளது. அதே வேளை திரு. எஸ். தொண்டமானின் தீர்வுத்திட்டம் தோல்வியை அடையுமானாலும், அவர் மலையகத்தில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடுமெனவும் இப்புத்திஜீவிகள் தெரிவித்ததாக அப்பத்திரிகைமேலும்தெரிவித்துள்ளது.

# விரைவில் பொதுத்தேர்தல்? சுதந்திரகட்சிக்குள் குழப்பம்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் கடும் சுகவீனமுற்றதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்ட நிலையில் கட்சிச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றது. நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதி பிரேமதாசா தேர்தலை அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.ஸி.நேற்றிரவு அறிவித்தது.

சுகவீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நெருங்கிய உறவினர்கள் மட்டுமே பார்வையிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

அநுரா பண்டாரநாயக்காவும் சந்திரிக்கா குமாரணதுங்காவும் தமக்குப் பின்னுள்ள அரசியல் குழுக்களைப் பலப்படுத்துவதில் ஈடுபடுகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்டு வலுவிழந்து நிற்கும் தற்போதையஅரசியல்சூழ்நிலையைப்பயன்படுத்தி பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி பிரேமதாசா முயற்சிக்கலாம் என்று தென்பகுதி அரசியல் அவதானிகள்எதிர்பார்க்கின்றனர்என பி.பி.ஸி. மேலும்தெரிவித்தது

## சுதந்திரக் கட்சியினுள் உட்கட்சி மோதல் தீவிரம்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சித் தலைமை மீதே சுதந்திரக்கட்சி எம்.பிக்களும், அங்கத்தவர்களும் பகிரங்கமாகத் தொடுத்திருக்கும் தாக்குதல்கள் உட்கட்சி மோதலை மேலும் தோற்றுவித்துள்ளனஎன்று 'தினகரன்' பத்திரிகை செய்தி வெளியிட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அமைச்சரவை இம்மாதத்தில் மாற்றம்

(கொழும்பு)

இம்மாதநடுப்பகுதியில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் மந்திரிசபைமாற்றம் ஒன்று இடம்பெற உள்ளது என்றும் இந்த மாற்றத்தின் மூலம் இரண்டு அல்லது மூன்று புதியவர்கள் அமைச்சரவைக்குஅறிமுகமாக இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கல்வி அமைச்சர் பதவி, தொழில் அமைச்சர் பதவி ஆகியவை இந்த மாற்றங்கள் மூலம் நிரப்பப்படவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான சுயாட்சி

### - ஹர்கிசன் சிங் சுல்ஜித்

(சென்னை)

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு அவர்களது உரிமை வழங்கப்படுவதோடு நியாயமான சுயாட்சியும் வழங்கப்படவேண்டும் என்று இந்தியாவும், இந்திய மாக்சிய கம்யூனி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் நடப்பது என்ன? உதவிவழங்குவோர் அக்கறை

## உதவி குறித்து முன்னோடி விசேட மாநாடு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் உள்நாட்டு யுத்தம் போன்றவற்றை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. இச்சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வரும் இவ்வேளையில் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பரிசில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முன்னோடியாக நாளை மறுதினம் விசேட மாநாடு ஒன்று நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic language. வார இறுதி வகுப்புகள் 12-01-92 10.30 மணிக்கு கம்பியூட்டர் பட்டதாரி ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. School of Business Administration 16, 8 வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி 3741)

### கல்வி

G.C.E (O L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 25 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். கற்பிப்பதற்கும் பயிற்சியளிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (2075)


அனைத்துலக பெண்கள்
நாளை முன்னிட்டு

## விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி நடாத்தும்

# ஓவியப்போட்டி

இவ்வருடம் 08-03-1992 இல் நிகழவிருக்கும் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப் போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

### போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்:-

கீழ்க்காணும் இரு முக்கிய விடயங்களை மனதில் கொண்டு அவ்விடயங்களின் ஏதாவது அம்சம் உள்ளடங்கியதாக உங்கள் ஓவியங்களைப் படைக்கவும்.

★ பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீது சமூகத்தின் அடக்கு முறைகள், அழுத்தங்கள் இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றை படம் பிடித்து காட்டுவதாக அமையவேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

★ சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்கள் யதார்த்த நிலையை, பிரதிபலிப்பதாக - எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

### ஏனைய விதிகள்:-

1) ஓவியங்கள் 28'' x 22'' (பிரிஸ்ரில் போட் அளவு) அளவுடையதாக இருக்கவேண்டும்.

2) வர்ண சாதனங்களாக பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன் படுத்தலாம்..
நீர்வர்ணம், மெழுகுச்சோக் வர்ணம்,
போஸ்ரர் வர்ணம், கலப்புச்சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்

3) போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களே போட்டிக்காக அனுப்ப முடியும்.

4) ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம் பெறக்கூடாது - பெயர் முகவரி, பாட

# இலங்கை திரும்புவோர் மன்னாரில் தங்க ஏற்பாடு

தமிழ் நாட்டிலிருந்து இம் மாத நடுப்பகுதியில் இலங்கை திரும்ப இருக்கும் அகதிகள் மன்னாரில் தங்கவைக்கப்படுவர். இவர்களை மன்னாரில் தங்கவைப்பது தொடர்பான மாநாடு கூட்டுப்படைத் தலைவர் ஹமில்டன் வனசிங்க தலைமையில் தள்ளாடி முகாமில் நடைபெற்றது.

பின்னர் இவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

# பங்களாதேஷில்கடும் குளிர்; 160 பேர் மரணம்

(மணிலா)

பங்களா தேசத்தில் கடும் குளிரால் 160 பேர் உயிரிழந்தனர் இதில் பெரும் பகுதியினர் பர்மிய அகதிகளாவர். இதேபோல இந்தியாவிலும் நிலவும் கடும்குளிரால் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

வறியநாடான பங்களா தேசத்தில் பர்மிய நாட்டு இராணுவ ஆட்சிக்கு பயந்து பர்மிய நாட்டு பிரஜைகள் தஞ்சம் புகுந்துள்ளதால் இவர்கள் பசிக்கொடுமையாலும் தகுந்த வீட்டு வசதிஇல்லாமையாலும் உயிரிழந்ததாக செய்திகள் கூறுகின்றன.

# தமிழருக்கு நஷ்டஈடு; மத்திய அரசு கோரிக்கை

காவிரி நதி நீர்ப்பிரச்சினை தொடர்பாக கர்நாடக மாநிலத்தில் சொத்துக்களை இழந்த தமிழர்களுக்கு முடிந்தளவு நஷ்டஈடு கொடுக்குமாறு கர்நாடக முதல்வர் பங்காரப்பாவை மத்திய அரசு கேட்டுக் கொண்டிருப்பதாக சென்னை வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கர்நாடகத்திலிருந்து வெளியேறிய தமிழர்கள் மீண்டும் அம்மாநிலத்திற்கு சென்று குடியேற வேண்டுமெனவும், அவர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் பொது வேண்டுகோள் ஒன்றை விடுக்குமாறு பங்காரப்பாவைத் தாம் கேட்டுக்கொண்டதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் காவிரிப் பிரச்சினையில் கலவரம் ஏதும் ஏற்படாமல் தமிழக அரசு நிலைமையைத் திறம்பட சமாளித்ததாகவும் அமைச்சர் சவான் பாராட்டு தெரிவித்தார்.

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பளையைச் சேர்ந்த பாலவிநாயக மூர்த்தி என்பவரின் ஹீரோசைக்கிள் கடந்த வியாழனன்று யாழ். பஸ்நிலையத்தில் களவாடப்பட்டுள்ளது. சைக்கிளிலிருந்த பையில் பணமும், பிறப்புச்சான்றிதழ் ஆவணங்களும் களவு போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர்களின் செயற்திட்டம் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

சகல அமைச்சர்களும் தமது கடந்தகால செயற்பாடுகள் பற்றியும் எதிர்கால செயற்திட்டங்கள் பற்றியும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவற்றைநடைமுறைப்படுத்தவே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர்கள் அத்துலத்முதலி பிரேமச்சந்திர ஆகியோரின் இடங்களுக்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என தெரியவருகிறது.


அமைச்சர்களின் செயற்பாடுகள் பற்றிக் காலத்துக்குக் காலம் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படுமென சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கம்போடியா மீதான பொருளாதாரத்தடைநீக்கம்

(சிங்கப்பூர்)

வைத்த அமெரிக்க அதிபர்

## நாலாம் ஆண்டு தேறுதல் நினைவுகள்



06-01-1988 இல் இந்தியப் படையின் சுற்றிவளைப்பின் போது சையனைட் அருந்தி நவாலியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

### வீரவேங்கை கிருபாகரன்

(சிறிகண்ணாடி)

வீரஜனனம் 07-02-1965 வீரமறைவு 06-01-1988

ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும்

பொ.நவரத்தின சிங்கமும், குடும்பத்தினரும்.

கிருபாகரன் வீதி, (புதியசெம்மணி வீதி,) நல்லூர் வடக்கு.

(சி 3740)

## நினைவு சுமக்கின்றோம்...

### 1992 - 01 - 06

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருநகரில் சிறிலங்காப் படையினர் கைது செய்ய முற்பட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ஜெயசிலன்** (கந்தையா மனோகரன் - உருத்திரபுரம் கிளிநொச்சி)

திருக்கோணமலை, பிரட்றிக்கோட்டை முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்

மாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

## போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்:-

கீழ்க்காணும் இரு முக்கிய விடயங்களை மனதில் கொண்டு அவ்விடயங்களின் ஏதாவது அம்சம் உள்ளடங்கியதாக உங்கள் ஓவியங்களைப் படைக்கவும்.

★ பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீது சமூகத்தின் அடக்கு முறைகள், அழுத்தங்கள் இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றை படம் பிடித்து காட்டுவதாக அமையவேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

★ சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்கள் யதார்த்த நிலையை, பிரதிபலிப்பதாக - எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

## ஏனைய விதிகள்:-

1) ஓவியங்கள் 28'' x 22'' (பிரிஸ்ரில் போட் அளவு) அளவுடையதாக இருக்கவேண்டும்.

2) வர்ண சாதனங்களாக பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன் படுத்தலாம்..
நீர்வர்ணம், மெழுகுச்சோக் வர்ணம்,
போஸ்ரர் வர்ணம், கலப்புச்சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்

3) போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களே போட்டிக்காக அனுப்ப முடியும்.

4) ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம் பெறக்கூடாது - பெயர் முகவரி, பாடசாலை விபரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத் தாளின் பின்புறத்தில் இடவும்.

5) போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 05-02-1992 இற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கும் பிந்தியதாக வந்து சேரும் ஓவியங்கள் போட்டிக்காக சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

6) உங்கள் ஆக்கங்களை உங்களுங்கள் பகுதியிலுள்ள வி. பு. மக்கள் முன்னணி, வி பு. மகளிர் முன்னணி பிரதேச, பிரிவுக் காரியாலயங்களில் சேர்ப்பிக்கவும்.

7) தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

## மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்:-

மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவரும் போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப்படைப்புத்தான் என்பதை அதிபர்கள், வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடுவித்து உறுதிப்படுத்த வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத் தாளின் பின்பக்கத்தில் செய்யவும்)

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு எனத்தனித்தனி பிரிவுகளாக நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

**வி. பு. மகளிர் முன்னணி**

(சி/3577)

---

தொடர்பாக கர்நாடக மாநிலத்தில் சொத்துக்களை இழந்த தமிழர்களுக்கு முடிந்தளவு நஷ்டஈடு கொடுக்குமாறு கர்நாடக முதல்வர் பங்காரப்பாவை மத்திய அரசு கேட்டுக் கொண்டிருப்பதாக சென்னை வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கர்நாடகத்திலிருந்து வெளியேறிய தமிழர்கள் மீண்டும் அம்மாநிலத்திற்கு சென்று குடியேற வேண்டுமெனவும், அவர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் பொது வேண்டுகோள் ஒன்றை விடுக்குமாறு பங்காரப்பாவைத் தாம் கேட்

பிரச்சினையில் கலவரம் ஏதும் ஏற்படாமல் தமிழக அரசு நிலைமையைத் திறம்பட சமாளித்ததாகவும் அமைச்சர் சவான் பாராட்டு தெரிவித்தார்.

---

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பளையைச் சேர்ந்த பால விநாயக மூர்த்தி என்பவரின் ஹீரோசைக்கிள் கடந்த வியாழனன்று யாழ். பஸ்நிலையத்தில் களவாடப்பட்டுள்ளது. சைக்கிளிலிருந்த பையில் பணமும், பிறப்புச்சான்றிதழ் ஆவணங்களும் களவு போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர்களின் செயற்திட்டம் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

சகல அமைச்சர்களும் தமது கடந்தகால செயற்பாடுகள் பற்றியும் எதிர்கால செயற்திட்டங்கள் பற்றியும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவற்றைநடைமுறைப்படுத்தவே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர்கள் அத்துலத்முதலி பிரேமச்சந்திர ஆகியோரின் இடங்களுக்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என தெரிய வருகிறது.

அமைச்சர்களின் செயற்பாடுகள் பற்றிக் காலத்துக்குக் காலம் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படுமென சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கம்போடியா மீதான பொருளாதாரத்தடை நீக்கம்

(சிங்கப்பூர்)

பதினேழு வருடங்களாக கம்போடியாவிற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்குவதாக நேற்று சிங்கப்பூரில் வைத்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் கூறியுள்ளார்

இதேவேளை பிலிப்பைன்ஸ் சில தளங்களை சிங்கப்பூருக்கு மாற்றுவதை சிங்கப்பூர் இஸ்லாமிய தேசியக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

## பாலஸ்தீனியர் நாடுகடத்தல் அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட வார்சோ தூட்டோ பகுதியில் குடியேற்றப்பட்ட யூதர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து 12 பாலஸ்தீனியர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இஸ்ரேலின் இந்த முடிவையிட்டு அமெரிக்கா உட்பட பல நாடுகள் இஸ்ரேலைக் கண்டித்துள்ளன.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் ரஷ்யாவிலிருந்து வரும் யூதர்களை இஸ்ரேல் குடியமர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## சென்னை விமான நிலையத்தில் இலங்கைப் பயணிகளுக்கு தனியான பரிசோதனைகூடம்

(சென்னை)

இலங்கைப் பயணிகளை பரிசோதிக்க சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தனியான கருமபீடமொன்று திறக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நோக்கி செல்லும் பிரயாணிகளை இக் கருமபீடத்தில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் பரிசோதனை செய்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---



06-01-1988 இல் இந்தியப் படையின் சுற்றிவளைப்பின் போது சையனைட் அருந்தி நவாலியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

**வீரவேங்கை கிருபாகரன்**

(சிறிகண்ணாடி)

| வீரஜனனம் | வீரமறைவு |
|---|---|
| 07-02-1965 | 06-01-1988 |

ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும்

கிருபாகரன் வீதி, (புதியசெம்மணி வீதி,) நல்லூர் வடக்கு.

பொ.நவரத்தின சிங்கமும், குடும்பத்தினரும்.

(சி/3740)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 01 - 06

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருநகரில் சிறிலங்காப் படையினர் கைது செய்ய முற்பட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**ஜெயசீலன்** (கந்தையா மனோகரன் - உருத்திரபுரம் கிளிநொச்சி)

திருக்கோணமலை, பிரட்றிக்கோட்டை முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்

1987ஆம் ஆண்டு பூநகரி - 4ஆம்கட்டையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
**அன்னக்கிளி** (குமாரு நகுலேஸ்வரன் - செம்மண்குன்று)

1988ஆம் ஆண்டு சண்டிலிப்பாயில் இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் காயமுற்று வீரச்சாவெய்திய
**ஈசன்** (இராசரத்தினம் பாலகேதீஸ்வரன் - 83,நெடுங்குளம் வீதி, அரியாலை)

நவாலியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய
**சிறி** (நவரத்தினசிங்கம் கிருபாகரன் - கல்வியங்காடு)

தென்மராட்சியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**சுதர்சன்**
**ஜோன்சன்**

1989ஆம் ஆண்டு புளியம்பொக்கணையில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
**சின்ன ஜீவகன்** (பழனி கேதீஸ்வரன்-இடதுகரை, முத்தையன்கட்டு, முல்லைத்தீவு)

1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பயிற்சி முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த
**வினோத்** (அல்பிறட் கிறிஸ்ரிராஜா - புலோப்பளை, பளை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3739)

## சிந்தனைக்கு

அபத்தத்தை அழகுறப் பேசுபவருக்கு தான் பேசுவது அபத்தம் என்று நன்கு தெரிந்திருக்கும்.

— ஜான்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 06-01-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208

த. பெ. எண் 05

# தமிழர் தாயகமே இறுதி இலக்கு

பௌத்த சிங்கள பேரினவாதிகளின் எதிர்ப்பின் காரணமாக அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் சற்று ஆட்டம் கண்டுள்ளது. அழிவைத் தடுத்து சமாதான முயற்சியை மேற்கொள்ளும் எனது பணியை ஒருசிலர் நிறுத்தப் பார்க்கின்றனர். அவர்கள் இனத்துவேசிகள் என தனது ஆத்திரத்தை அமைச்சர் தொண்டமான் கொட்டித் தீர்த்துள்ளார்.

திரு. தொண்டமான் இ. தொ. காங்கிரஸ் சார்பில் சமரசத் தீர்வுத் திட்டத்தை முன் வைத்திருப்பினும் அவர் ஒரு சிரேஷ்ட அமைச்சர். அமைச்சரவையிலும், ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடத்திலும் அவருக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்குஉண்டு. ஆனால், திரு. தொண்டமானின் சமரசத்திட்டத்திற்கு பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பிய போது இவர்கள் எவரும் திரு. தொண்டமானுக்கு ஆதரவாக ஒரு சொல் கூடத்தானும் பேச முன்வரவில்லை. யதார்த்த நிலையை தெளிவாக உணர்ந்து கொண்ட இடது சாரிகளான வாசுதேவ நாணயக்காரா போன்ற ஒரு சிலரே ஆதரித்து அறிக்கை வெளியிட்டனர். மற்றவர்கள் - ஆளும் கட்சியினர் உட்பட - பௌத்த பேரினவாதத்திற்குப் பயந்தார்கள். தமது அரசியல் எதிர்காலத்திற்காக யதார்த்த நிலைபற்றி அவர்கள் பேச முன்வரவில்லை.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டிருப்பது போல், 'யாராவது எனது யோசனையை எதிர்க்கலாம். மாற்று யோசனைகளை, எவராவது தெரிவிப்பதாகவும் இல்லை' என்பதே உண்மை.

இந்நிலையில், 'ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம்' இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. புலிகள் தான் தடையாக உள்ளனர் என கொழும்பில் அடைக்கலம் தேடியுள்ள சில தமிழ்க்குழுக்கள் தெரிவிக்கின்றன. பெரும் பிரசாரமும் செய்கின்றன.

திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டம் சற்று முற்போக்கானது மட்டுமே. அது தமிழரின் அபிலாசைகள் யாவற்றையும் தீர்த்து விடவில்லை. ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே தீர்வு காணவே முற்படுகின்றது. இந் நிலையிலேயே அத் தீர்வுத் திட்டத்திற்கு பௌத்தப் பேரினவாதத்தின் பலமான எதிர்ப்பும், அரசாங்கத்தின் ஆதரவின்மையும் இருக்கும் போது ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்கள் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து தமிழரின் உரிமைகள் என்று எதைப் பெறப்போகின்றார்கள்? மீண்டும் மாவட்ட சபைக்குப் போகப் போகின்றார்களா? அல்லது அரசிற்கெதிரான போராட்டம் என கறுப்புக்கொடி காட்டப் போகின்றார்களா? அந்தத் துணிவுதானும் அவர்களுக்கு உண்டா?.

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டால் போதும் என்பதே இவர்களின் கோட்பாடாகவுள்ளது. ஆனால் இதில் அவர்கள் பணயமாக வைத்திருப்பது தமது மூக்கையல்ல. தமிழர்களின் உரிமைகளை, இதனால் நெருக்கடியை எதிர்கொள்வது தமிழினமே. ஏனெனில், பேரினவாத சக்திகளின் இலக்கு புலிகள் என்பதல்ல, ஒட்டுமொத்தமாகத் தமிழ் இனமும், அவர்களின் தாயகமுமே.

# அமெரிக்கத் தளங்கள் சிங்கப்பூருக்கு மாற்றம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் அமெரிக்க இராணுவ வசதிகளை அதிகரிக்கவும் பிலிப்பைன்ஸ் தளங்களை மூடிவிடவும் சிங்கப்பூர் அமெரிக்காவிடம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார். சிங்கப்பூரில் அதன் பிரதமர் கோர்ச் சோங்தாங்குடன் இணைந்துநடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

பிலிப்பைன்சிலுள்ள சுபீக் பீட்கடற்படை தளத்தை அமெரிக்கா சிங்கப்பூருக்கு மாற்றி அமைக்கும் என அவர் தெரிவித்தார்.

## யூக்கோவில் யுத்தநிறுத்தம்; குழப்பமான செய்திகள்

(பெல்கிரேட்)

யூகோசிலோவியாவின் குரேசியக்குடியரசில் 15 ஆவது தடவையாக செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து பின்பற்றப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

என்னும் குரோசியப்படைகள் யுத்தநிறுத்தத்தை மீறிவிட்டதாக சமஷ்டிப்படைகள் குற்றம் சாட்டியுள்ளன. யூகோ சமஷ்டிப்படைகள் குரோசியா மீது ராக்கெட் தாக்குதல்களை நடாத்தியதாக செய்தித் தாபனமொன்று தெரிவித்தது

இதற்கிடையில் ஐ. நா. சிறப்புத் தூதர் சைரஸ்வான்ஸ், யூகோ அமைதி மாநாட்டுத் தலைவர் லோட் கரிங்ரனுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார். இவர் நியூபோர்க் ஐ. நா. செயலகத்தில் யூகோவிற்கு ஐ. நா. அமைதிப் படையை அனுப்புவது குறித்த தனது அறிக்கையை சமர்ப்பிப்பார்.

## முப்படைத் தளபதிகள் ஹமில்டனுடன் வந்தனர்

(கொழும்பு)

கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்க வடபகுதி விஜயம் மேற்கொண்டபோது அவருடன் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா, மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, பிரிகேடியர் விஜயவிமலரட்ணா உட்பட இராணுவ, பொலிஸ் விமானப்படையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகளும் சென்றிருந்ததாகவும் தெரியவருகிறது.

## அதிகாரிகள் வாகனத்தில் நோயாளர் சைக்கிளில்

(சுண்டிக்குளி)

சுகாதார சேவையில் முக்கிய பணிபுரியும் அரசசார்பற்ற நிறுவனமும், சர்வதேச புகழ் பெற்ற உள்ளூர் நிறுவனமுமான ஒன்றில் அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் தமது சொந்தத் தேவைக்காக வாகனங்களை பயன்படுத்திக் கொண்டு நோயாளர்களை ஏற்றுவதற்கு சைக்கிள் வண்டிகளை பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதிகாரிகள் தமது வீட்டிற்கு தயிர்வாங்க சென்றாலும் சரி மரக்கறி வாங்கச் சென்றாலும் சரி சங்க வண்டியிலேயே போவதாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை ஜெய்ப்பூர் செயற்கை கால் நிறுவனம் அன்பளிப்பு செய்த சைக்கிள் வண்டிகளை நோயாளர்களை ஏற்றுவதற்கு பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (75)

## கிழக்கு மாகாணத்தில் பலவந்த சமய மாற்றம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்கள் பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது. மூதூர், பச்சைநூர் பகுதிகளில் வாழும் தமிழ்மக்களில் இருநூறு குடும்பத்தினர் கொலை மிரட்டலுக்கு மத்தியில் முஸ்லிம் மதத்தைத் தழுவிக் கொள்ள வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது

### உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான 1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தற்போது தபால்கந்தோரில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### குடும்பஸ்தர் காயம்

(ஓமந்தை)

கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை ஓமந்தைவிளக்குவைத்தகுளம் என்னுமிடத்தில் கட்டுத்துவக்கைதயார்படுத்தும்போது அது தவறுதலாக வெடித்ததில் எஸ். நாகராசா (வயது 45) என்பவரின் இது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டது. இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ச, லோ)

### மின்சார

வாசகர் கூட்டுப்படைகளின் தலைமைஅதிகாரிதிரு. ஹமில்டன் வணசிங்காவுடன் மேற்படி விடயம் தொடர்பாக உரையாடியதைத்தொடர்ந்து திருத்த வேலைகளுக்காக மின் உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரசபையின் வடபிராந்திய முகாமையாளரும் பிரதம பொறியியலாளருமான திரு. கந்தசாமி மின் உபகரணங்களை வடபகுதிக்கு எடுத்து வருவது மற்றும் திருத்த வேலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

முதற் கட்ட திருத்தவேலைகள் மாங்குளத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்கு வேண்டிய மின் உபகரணங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையான லொறிகளில் மாங்குளத்திற்கு எடுத்துவரப்படவுள்ளன. ஒரு தொகுதியின் உபகரணங்கள் பருத்தித்துறை வந்தடையும் கப்பல் ஒன்றில் அனுப்பி வைப்பது தொடர்பாகவும் கொழும்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### இன்று

களும் இவ்வாண்டின் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன. கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம் அகதிமுகாமாக இயங்குவதால் இப்பாடசாலை ஆரம்பமாகும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

### புலிகள்

தகவல்களைப் பெற்றுத் தருமாறும்இந்தியா கேட்டுள்ளது

ராஜீவ் கொலை தொடர்பான விசேட விசாரணைக் குழுவினருக்குக் கிடைத்துள்ள தகவலின்படி சிவராசன் தலைமையிலான கோஷ்டிக்கு இந்தியாவிற்கு வெளியேயிருந்து உதவிகள் கிடைத்துள்ளன. இதனையடுத்தே இந்த ஐந்து நாடுகளிடம் இந்தியா உதவி கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சிங்கப்பூர் சென்றிருக்கும் சி. பி. ஐ. பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபரான எமோட்காந் சிங்கப்பூர் பொலிஸ் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடாத்தியபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

### இனப்பிரச்சினை

வட அயர்லாந்துப் பிரச்சினை முதன்மையான வருந்தத்தக்க ஓர் உதாரணமாகும். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நான்கு முறைகள் இங்கிலாந்துப் பிரதமமந்திரியாகவிருந்த வில்லியம் கிளாட்ஸ்ரோன் அயர்லாந்துக்குப் பூரண சுதந்திரம் வழங்க முன்வந்தார். ஆனால் அவர் முயற்சித்த போதெல்லாம் அவர் கட்சியிலுள்ள சிலரும், எதிர்க்கட்சியும் எதிர்த்தது என்றும்-

ஆனால் அயர்லாந்து சுதந்திரத்துக்கான அதன் போராட்டத்தைக் கைவிடவில்லை. அயர்லாந்து கஷ்டப்படுகிறது என்றாலும் இங்கிலாந்துக்கும் பெரும் இழப்பு ஏற்படுகிறது. இது கட்டுக்கடங்காத பிரச்சினையாக இன்று வளர்ந்துள்ளது. இது சிறிலங்காவில் நடப்பதைப் போன்றதாகும். தென் ஆபிரிக்காவில் முன்னைய அரசுகளின் கீழ் இனவாதம் தீவிரமாக இருந்தது. நெல்சன் மண்டேலாவுடன் கூடி ஜனாதிபதி டி. கிளார்க் பயனுள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்றும்-

இந்தச்சந்தர்ப்பத்தில் மூத்த அரசியல் வாதி தொண்டமானின் ஆலோசனைகளை நான் வரவேற்கிறேன். தொண்டமானின் சமயம் இனம், சாதி என்பது ஒரு பொருட்டல்ல. அவர் ஒரு இலங்கையர் அவர் ஆலோசனைகள் சிலவற்றை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அவர் ஆலோசனைகளை வரவேற்கிறேன். மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆலோசனைகள் அனைத்தையும் ஆராய்ந்து இந்த முக்கிய பிரச்சினைக்கு ஏற்புடைய ஒரு தீர்வைக்காண வழி செய்யும் நாட்டைப்பீடித்துள்ள கான்சருக்கு தீர்வு கண்டு, நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் பேணி பொருளாதார அபிவிருத்திக்கு வழி வகுக்க இது இறுதிச் சந்தர்ப்பம் என்று குணவர்த்தனா வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க. பொ. த. (சா) பாடங்களை 6 ஆகக்குறைக்க கோரிக்கை

(கொழும்பு)

க. பொ. த (சாதாரணம்) தரம் கலை திட்டத்தில் பாடங்களை ஆறு பாடங்களாகக் குறைப்பதன் மூலம் க. பொ. த. (உயர்தரம்) க. பொ. த. (சாதாரணம்) தரங்களுக்கிடையிலுள்ள சமச்சீரற்ற நிலையை இல்லாமல் செய்யலாம் க. பொ. த (உயர்தரம்) கலைத் திட்டத்தில் மூன்று பாடங்கள் தான் இடம்பெற வெண்டும் என்றும், க. பொ. த (சாதாரணம்) தரத்தில் கணிதம், விஞ்ஞானம், முதல் மொழி, இரண்டாவது மொழி, சமூகக்கல்வி, சமயம் ஆகிய பாடங்கள் கலைத்திட்டத்தில் இடம் பெறவேண்டும்.

இவ்வாறு கொழும்பு கத்தோலிக்க மறைமாவட்டக் கல்விக்கான செயலகத்தூதுக்குழு தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை சமர்ப்பித்துள்ளது.

தூதுக்குழு தெரிவித்துள்ள ஏனைய ஆலோசனைகள் வருமாறு:-

★ ஒரு வாரத்தில் மூன்று பாடநேரங்கள் சமய பாடத்துக்கு ஒதுக்க வேண்டும்.

★ முதலாம் ஆண்டிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகப் போதிக்க வேண்டும்.

★ கம்பியூட்டர் விஞ்ஞானம் போன்ற நவீன தொழில் நுட்ப பாடங்கள் கலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும்.

★ ஆரம்ப வகுப்பு முதல் க. பொ. த (சாதாரணம்) வரை பொது விஞ்ஞானம் இடம்பெற வேண்டும்.

இடைநடுவில் பாடசாலையை விட்டு விலகியவர்கள் குறித்து ஆலோசனை தெரிவிக்கையில் ஒவ்வொரு உதவி அரசாங்கஅதிபர்பிரிவிலும் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அமையவேண்டும், தொழில் வழங்குநர்களுக்கும் பாடசாலைகளுக்குமிடையில் தொடர்பு, வழிகாட்டுதல் மற்றும் மீன்பிடி, மட்பாண்ட வேலை, தையல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வங்கி இடமாற்றம் முல்லை. மக்கள் எதிர்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இலங்கை வங்கியை வவுனியாவில் இயங்க வைக்க எடுத்த நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது கடந்த 29 ஆம் திகதி வங்கியின் ஆவணங்கள் மீட்கப்பட்டு வங்கி அதிகாரியின் வசதி கருதி வவுனியா வில் இயங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இதையறிந்த மக்கள் இன்றைய காலகட்டத்தில் முல்லையில் இருந்து வவுனியாவுக்குச் சென்று வங்கி அலுவல்களைப் பூர்த்தி செய்ய முடியாது எனவும் எனவே இந்த முயற்சிகளை கைவிட்டு முல்லை மாவட்டத்திலேயே வங்கியை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அங்குள்ள மக்கள் முல்லை அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இறைச்சிக் கடைகள் நேற்று மூடிக்கிடந்தன

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (05-01-92) ஆட்டு, மாட்டிறைச்சிக் கடைகள் மூடிக் கிடந்தன.

இதனால் ஆயிரக்கணக்கான இறைச்சிப் பாவனையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப நேர்ந்தது.

யாழ். கொட்டடிப்பகுதியில் அமைந்துள்ள கொல்களம் துப்புரவு செய்யப் படாமல் துர்நாற்றம் வீசித் தொற்று நோய்கள் பரவும் அளவுக்கு மோசமடைந்திருந்ததை சுட்டிக்காட்டியும் இறைச்சிக் கடைவியாபாரிகள் அசிரத்தையாக இருந்ததால் கால்நடைகளை நேற்று உணவுக்காக வெட்டும் வேலைகளை இடைநிறுத்தி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கையை அடுத்து கொல்களம் துப்புரவு செய்யும் பணி துரிதமாக நடைபெற்றதாகவும் தெரியவந்தது (21)

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

இளவாலையைச் சேர்ந்த சதாசிவம் பாலபுத்திரன் என்பவரால் பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் கடிகாரம் கொக்குவிலில் கண்டு எடுக்கப்பட்டது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெறவும்.

இரு பாடசாலைகளில் மொழியில் நாட்டமுள்ளவர்களே இக்கற்கை நெறியைப் படிக்க அனுமதிக்கப்படுவார்கள். அழகியல் கல்விக்குப் பதிலாக ஆங்கில இலக்கியத்தை மாணவர் ஒரு பாடமாகப் படிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

1993இல் இத்திட்டம் தனியார் பாடசாலைகளுக்கும், ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இலங்கையில் மேற்படி வகுப்புகளில் ஆங்கில இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் முதல் மாவட்டம் யாழ். மாவட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

நமுனுகுலகந்த மலைகளில்ஒன்றான இம்மலை அடிவாரத்தில் 50 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன.

புலிகளினால்கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இம்முகாமிலிருந்து வாயுக்குண்டுகள், கண்ணிவெடி தயாரிப்பு உபகரணங்கள், வயர்கள் என்பன கைப்பற்றப்பட்டன என சிறிலங்கா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## ராமதாஸ், பண்ருட்டி பொலிசாரால் கைது

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எஸ். ராம்தாசும் அக்கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரனும் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை தர்மபுரியில் இருந்து பெங்களூருக்கு சென்று கொண்டிருக்கும் வழியில் கிருஷ்ணகிரியில் ராம்தாஸ் கைது செய்யப்பட்டார் என்றும் அவருடன் சென்ற 50 கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதே போலவே தர்மகிரியில் ராமச்சந்திரன் கைது செய்யப்பட்டார்.

காவிரிநதி நீர்ப்பிரச்சினையால் கர்நாடகத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள தமிழர்களை திருப்பிக் குடியமர்த்த ஒரு பேரணியை பெங்களூருக்கு அனுப்ப இக்கட்சி முடிவு செய்திருந்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பெற இருக்கிறது. இம்மாநாட்டில் இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்கள் மேற்படி உதவி வழங்கும் நாடுகளின் கவனத்தை பெருமளவில் ஈர்க்கும் என்றும் கூறப்படுகிறது. உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து இலங்கை இவ்வாண்டு சுமார் 808 மில்லியன் டொலர் பணத்தை கடனாக அல்லது நன்கொடையாக எதிர்பார்க்கிறது. ஆனால் உதவி வழங்கும் நாடுகள்இலங்கையில் நீண்ட காலமாக நடைபெற்ற மனித உரிமை மீறல் மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகள் போன்றவற்றை பட்டியல் போட்டு வைத்திருப்பதாகவும்அத்துடன் தற்போது நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம், மனித உரிமை மீறல் போன்ற நடவடிக்கைகளையும் அவதானித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

சிறிலங்கா உள்ளன.

இந்த மாற்றம் மூலமாக ஐ. தே. கட்சியில் உள்ள இரு சிரேஷ்டஉறுப்பினர்கள் அமைச்சர்களாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உத்தேச மந்திரிசபை மாற்றத்தில் சில இராஜாங்க அமைச்சர்கள் திட்ட அமைச்சர்களாக பதவி உயர்த்தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியினுள் டுள்ளது.

பண்டாரநாயக்கா குடும்ப அங்கத்தவர்கள் தலைமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து கடந்த வாரம் இரு சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் பகிரங்கமாகவே அறிக்கைகளை விடுத்துள்ளனர் என்றும்,

கட்சிக்குள் வளர்ந்து வரும் அபிப்பிராயபேதங்களுக்குத் தீர்வு காண்பது சாத்தியமற்றதென்றும்,

இப்பிரச்சினைக்கு மூலகாரணம் தலைமையில் இருக்கும் போட்டாபோட்டிதான் என்று சுதந்திரக்கட்சி அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார் என்றும் அது தெரிவித்துள்ளது.

ஐக்கிய ஸ்டு கட்சியும் கருதுகின்றன என அக்கட்சியின் பிரமுகர் ஹர்கிசன் சிங் சுல்ஜித் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இக்கட்சியின் பதின் நான்காவது மாநாட்டில்பேசியபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையுடன் விடுதலைப் புலிகள் இதனை எதிர்க்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## மாணவர் இயக்க விசேட கலந்துரையாடல்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் பிரிவு ரீதியாக விசேட கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்திருக்கிறது.

வலிகாமம் பிரிவில் இன்று மாலை 4.00 மணியளவில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும்வடமராட்சிப் பிரிவில் நாளைமாலை 4.00 மணியளவில் நெல்லியடி மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சிப் பிரிவில் எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் அனைத்து உறுப்பினர்களும் தவறாறு கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர்.

## "விடுதலைப் புலிகள்" நாளை வெளிவருகிறது

''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் குரல் 27 நாளை வெளிவர உள்ளது. போரா? சமாதானமா? என்ற தலையங்கத்துடன் வெளிவருகிறது.

மேலும் தமிழீழ காவல்துறையின் பிறப்பு பற்றிய ஒரு கட்டுரையும், 'சிங்கள மக்களுக்கு ஒரு அழைப்பு' தலைப்பில் ஆசிரியர் தலையங்கமும் தீட்டப்பட்டுள்ளது.

இவற்றுடன் வேறும் சில விடயங்களையும் இது கொண்டுள்ளது. இதன் பக்கங்கள் 10 ஆகும். அன்பளிப்பு 7.50 சதம் ஆகும்.

## இந்திய தேர்தல் சட்டத்தில் திருத்தம்

சுயேச்சை வேட்பாளர் இறந்து விட்டால் லோக்சபா மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல் ரத்து செய்யப்படுவதைத் தடுக்கும் அவசர சட்டமொன்றை இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பிறப்பித்துள்ளார்.

இந்த அவசர சட்டத்தின் மூலம் மக்கள்பிரதிநிதித்துவ சட்டம் திருத்தப்படுகின்றதுஎன்றும்,

பஞ்சாப் தேர்தலை ஒட்டியே இந்தச் சட்டம் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அழைப்பு இல்லாவிடினும் யாழ். செல்வேன் -தொண்டா

விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் கடிதம் கிடைக்காவிட்டாலும் யாழ்ப்பாணம் செல்வேன் என்று அமைச்சர் திரு. தொண்டமான் கூறியிருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்களது கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனிடம் இருந்து பதில் கடிதம் கிடைக்காது விட்டாலும் எனது சமாதானத் திட்டம் பற்றி விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் செல்வேன் என்று அமைச்சர் தொண்டமான் கூறினார்.

## கர்நாடகாவிலிருந்து 97520 தமிழ் அகதிகள்

கர்நாடகா மாநிலத்திலிருந்து 97520 தமிழர்கள் தமிழகத்திற்கு வந்திருக்கின்றனர்என தமிழ்நாடு மாநிலஅரசின் செய்திகுறிப்பு ஒன்று கூறுகிறது.

தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் தங்கியிருக்கும் கர்நாடகா மாநில தமிழர்கள் தமது பிரதேசங்களை கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் இவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி குமாரவேலு

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இலட்சுமி குமாரவேலு 05-01-92 இல் காலமானார். இவர் காலஞ் சென்ற குமாரவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற கைலாசபிள்ளை, வெற்றிவேலு, தங்கலட்சுமி ஆகியோரின் சகோதரியும், சுவர்ணலிங்கம் (ரங்கன், கனடா), பரமலிங்கம் (கண்ணன், கனடா), வைகுந்தவாசன் (வைகுந்தன், ஜேர்மனி), பரமேஸ்வரி (பரா, ஆசிரியை, சென். மேரிஸ் வித். யாழ்ப்பாணம்), சிறீரங்கநாயகி, செந்தமிழ்ச்செல்வி, திலகவதி (ஆசிரியை, றோ. க. பாடசாலை மண்டைதீவு), நிர்மலா ஆகியோரின் அன்புத்தாயாரும், சந்திரசேகரம், இந்திரகுமாரி (அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், சுரேணுகா, சிறீநிகேதன், பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-01-92 இன்று பி. ப. 3 மணியளவில் 24, அத்தியடி, புதுவீதியிலுள்ள இல்லத்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆசிரியை, பரா-குமாரவேலு
(மகள்)

[2076]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது